78-க்குள் ஓய்வுபெற்றுவிடுவார்கள். எனினும் இதுபோன்ற ஒரு மசோதாவைக் கொண்டு வந்திருப்பதுதான் நம்முடைய களங்கத்தை அகற்றக் கூடியதாக இருக்கிறது. இது பற்றி பெரும் அளவில் மகிழ்ச்சி அடைய வேண்டியதில்லை.

திரு லத்தீப் கூறியது போல இது ஐ.சி.எஸ். அதிகாரிகளுடைய சாயல். போக்கு, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடத்தில் வந்துவிடாதிருக்க வேண்டும், சட்டசபை, அமைச்சரவை ஆகியவற்றுக்குப் புறம்பாக ஆதிக்கம் செலுத்துகிற பியூராக்கிரசி மனப்பான்மை ஏற்படாதிருக்கவேண்டும். அவர்கள் அறிவாளிகளாக மட்டும் இருந்து பயன் இல்லை. நாட்டு மக்களுடைய லட்சியத்தை நிறைவேற்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்டிருக்கிற பணியை பொறுப்புணர்ச்சியோடு நிறைவேற்றித் தருகிற புத்திசாலிகளாக இருக்கவேண்டும். அதற்கு இந்த மசோதா ஒரு எடுத்துக்காட்டு என்பதைத் தவிர—இது என்னமோ செத்த குழிக்கு பால் ஊற்றுவதுபோலத்தான் இருக்கிறது என்று சொல்லி இந்த மசோதாவை ஆதரித்து என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவை தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்ட வரைவினை வரவேற்று எல்லோரும் பேசியிருப்பதற்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல இது பல ஆண்டுகளுக்கு முன்பாகவே வந்திருக்க வேண்டிய சட்டம். இன்றைக்கு சர்விசில் இருக்கக்கூடிய ஐ.சி.எஸ். அதிகாரிகள் 48 பேர்கள்தான் இருப்பார்கள். அவர்களும் தானே போய்விடப்போகிறார்கள். என்றாலும் இது போன்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வராதிருந்தால் எதிர்கால வரலாறு நம்மைப் பழிக்கும். நமக்கு ஒரு களங்கம் ஏற்படாதிருக்கவேண்டுமென்றால் இதுபோன்ற ஒரு சட்டத்தை இப்போதாவது நிறைவேற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே என்கிற மகிழ்ச்சியைத்தான் நாம் எல்லோரும் அடையவேண்டும். எப்படி மன்னர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகைகள் எடுக்கப்பட்டு விட்டனவோ அதுபோல இந்த மசோதாவின் மூலம் ஐ.சி.எஸ். அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த சலுகைகள் எடுக்கப்படுகின்றன. இந்த மசோதா எல்லோருடைய பாராட்டுதலையும், ஒப்புதலையும் பெற்றிருக்கிற காரணத்தினால் இதை இந்த அவை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனித் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி வெளியிடும் கடனீட்டு பத்திரங்களுக்கு அரசு அளிக்கும் உயரளவு உத்திரவாதத் தொகை உயர்த்தப்படுவது குறித்து.

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார்: பேரவைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1934-ம் ஆண்டு கூட்டுறவு நில வள வங்கிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1934) 6-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்

பிரிவின்படி, தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்கள் குறித்து இவ்வரசு அளிக்கும் உயரளவு உத்திரவாதத் தொகையை அதன் மொத்த மதிப்பு ரூ. 175 கோடி (ரூபாய் நூற்று எழுபத்தைந்து கோடி மட்டும்) வரை உயர்த்தலாமென்று இப்பேரவை அரசிற்குப் பரிவுரை செய்கிறது கூட்டுறவு நிலவள வங்கி அவ்வப்போது மீட்கக்கூடிய கடனீட்டுப் பத்திரங்களின் மதிப்பு மேற்சொன்ன உத்திர வாதத் தொகையில் அடங்காது. இத்தகைய பத்திரங்களின் செல்திறன் கால அளவு அவை வெளியிடப்படும் தேதியிலிருந்து எந்த ஒரு நேர் விலும் 25 ஆண்டுகளுக்கு மேற்படக்கூடாது. இக் கடனீட்டுப் பத்திரத் தொடர் ஒவ்வொன்றுக்கும் இந்திய ரிசர்வ் வங்கி ஏற்பளிக்கும் வட்டி வீதத்திற்கு மேற்படாத வட்டி வீதம் கிடைக்கும்" என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இதுபற்றிய விளக்கக் குறிப்பு ஒன்றும் மாண்புமிகு உறுப் பினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை அவை நிறைவேற்றித் தரும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

8 அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப் பாடு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு, 1972 ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகை கட்டுப்பாடு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித் துள்ளார்கள்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப் பாடு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/72)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப் பாடு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவை *(சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 39/72) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 8 சட்ட மேலவை உறுப்பினர் களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையில்

* 22—8—72-ம தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.